Thinakkural [2/4/15]

# ஒரே நாளில் மூன்று நூல்களை வெளியிடுவது மிகப்பெரிய சாதனை

## – இந்திய துணைத்தூதர் நடராசன் –

தமிழ்மொழியைச் சரியாக உச்சரிப்பதற்கே மிகவும் கஷ்டப்படுகின்ற பலரை நான் பார்த்திருக்கிறேன் . இத்தகைய சூழ்நிலையில் ஒரே நாளில் மூன்று நூல்களை வெளியிடுவது என்பது மிகப்பெரிய சாதனையாகும்.

இவ்வாறு இலங்கை குமரித் தமிழ்ப் பணிமன்ற நிறுவுநர் நா. வை. குமரி வேந்தன் ஆக்கிய உலக உயர் தனிச் செம்மொழி செந்தமிழ் , தமிழர் இலக்கிய இலக்கணம் ( ஓர் அறிமுகம்) , திருக்குறள் , ஔவை நூல்கள் ஆகிய மூன்று நூல்களின் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதர் ஆ. நடராசன் குறிப்பிட்டார்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினர் தொடர்ந்து பேசுகையில்,

சப்ரகமுவ மாகாணத்தில் எவ்வாறு மிகச் சிறந்த இரத்தினக் கற்கள் காணப்படுகிறதோ அவ்வாறே யாழ்ப்பாணத்தில் மிகச் சிறந்த எழுத்தாளர்களும் புத்தி ஜீவிகளும் வாழ்கின்றனர். இன்று தமிழ்மொழியைக் கூட சரியாக உச்சரிக்கத் தெரியாதவர்கள் பலரை நான் பார்த்திருக்கிறேன். அத்தகைய தமிழர்கள் பலர் மத்தியில் ஒரே நாளில் மூன்று நூல்களை வெளியிடும் நா. வை. குமரி வேந்தனின் பணி பாராட்டுக்குரியது. நிறைந்த தமிழ்ப் பற்றாளரான அவர் மகேந்திரராசா என்ற தனது பெயரையே தூய தமிழில் குமரிவேந்தன் என்று மாற்றியமைத்துள்ளார்.

அழகிய தீவான நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட குமரிவேந்தன் நூல்கள் எழுதியதால் யாழ்ப்பாணத்தில் பெருந்திரளான மக்கள் மத்தியில் வெளியீட்டு விழா நடைபெறுகிறது. யாழ்ப்பாணத்து அறிஞர்கள் பலரின் நல்ல உரைகளைக் கேட்க முடிகிறது. இவ்வாறு அறிஞர்கள் பலரும் நூல்களை எழுதி வெளியிட்டு விழாக்களை நடத்த வேண்டும். அந்த விழாக்களில் நாங்களும் நல்ல தமிழறிஞர்கள் பலரின் உரைகளைக் கேட்கக்கூடியதாக இருக்கும் என்றார்.

உலக உயர் தனிச் செம்மொழி செந்தமிழ் என்ற நூலை பிரதமவிருந்தினரின் பாரியார் திருமதி சாந்தி நடராசன் வெளியிட்டு வைத்தார். தமிழர் இலக்கிய இலக்கணம் என்ற நூலை தா. ச. சொலமன் அடிகளார் வெளியிட்டு வைத்தார்.

தமிழர் மெய்யியல் கோட்பாடு என்ற நூலை வடமாகாண கல்வி அமைச்சர் த. குருகுலராசா வெளியிட்டு வைத்தார்.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் இந் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புப் பிரதிகளை வழங்கினார்.

( இ - 14)